भारत का प्रधान कोंसलावास
जॉफना

सत्यमेव जयते

Consulate General of India
Jaffna

No. PR/13 29 August 2013

**செய்திக்குறிப்பு**

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் இத்தால் பொதுமக்களுக்கு பின்வரும் அறிவித்தலை வழங்க விரும்புகிறது. கீழ் குறிப்பிடும் நிறுவனமானது (இதன் பின்னர் சேவை வழங்குனர் என அழைக்கப்படும்) இந்தியாவுக்கான நுழைவுச்சீட்டு (விசா) விண்ணப்பம் தொடர்பான சேவைகளையும் வெளிநாடுவாழ் இந்திய பிரஜாவுரிமைச் சான்றிதழ் அல்லது அட்டை (Overseas Citizenship of India(OCI) Certificate/Card) தொடர்பான சேவைகளையும் ஆவணங்களை உறுதிப்படுத்தல் போன்ற தூதரகம் தொடர்பிலான சேவைகளையும் கீழே குறிப்பிட்ட தமது முகவரியில் செப்ரெம்பர் 02, 2013 திங்கட்கிழமை முதல் வழங்கவுள்ளனர்.

ஐவிஎஸ் லங்கா தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம்
145 கோவில் வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே. 021 221 7151
தொடர்பு: திரு. ஆர்.அமிர்தராஜ், முகாமையாளர் ( கைபேசி: 0779961295)
இமெயில்: infojaffna@ivsglobal.in
இணையத்தளம்: www.ivsglobal.in www.ivsvisalanka.com

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவம் (இணையவழி) நிரப்பல், நிழற்பிரதி வெய்தல், புகைப்படம் எடுத்தல், பொதிகள் அனுப்பல் முதலிய சேவைகளை விருப்பத் தெரிவின் அடிப்படையில் அவர்களிடம் பெறலாம்.

2. இந்திய நுழைவுச்சீட்டை பெற விரும்பும் ஒருவர் இணையவழிமூலம் http://indianvisaonline.gov.in/visa/ எனும் இணையத்தளத்திற்கு சென்று விண்ணப்பத்தை சமர்ப்பித்து அதன் பதிப்பிக்கப்பட்ட பிரதியுடன் மேற்குறிப்பிட்ட சேவை வழங்குனரிடம் நுழைவுச்சீட்டு பெறுவது தொடர்பான மேலதிக விடயங்களை பூர்த்தி செய்வதற்காக செல்லுதல் வேண்டும்.

Address: 14, Maruthady Lane, Nallur Jaffna, Sri Lanka. Tel No. 21-2220504/05/2220995(Direct)/Fax No. 21-2220503 Email: cons.jaffna@mea.gov.in / Website: www.cgijaffna.org

3. மேலும் இந்தியவழித்தோன்றலாக உள்ள, தகைமையுடைய ஒரு நபர் வெளிநாடுவாழ் இந்திய பிரஜாவுரிமைச் சான்றிதழை அல்லது அட்டையை (Overseas Citizenship of India(OCI) Certificate/Card) பெற, இந்திய பிரஜைகளுக்கான கடவுச்சீட்டைப் பெறுதல் போன்ற சேவைகளை இந்தியத் துணைத் தூதரகத்தில் பெறவிரும்பும் வடக்கு மாகாணத்தில் வசிக்கும் நபர் ஒருவர் மேற்படி சேவை வழங்குனரை அத்தகைண சேவைகளுக்காக பெற்றுக்கொள்ளவென தொடர்பு கொள்ள முடியும். தகைமையுடைய ஒரு நபர் வெளிநாடுவாழ் இந்திய பிரஜாவுரிமைச் சான்றிதழை அல்லது அட்டையை பெற விரும்பும் ஒருவர் இணையவழிமூலம் http://passport.gov.in/oci/ எனும் இணையத்தளத்திற்கு சென்றும் விண்ணப்பிக்கலாம். இதேபோல இந்திய கடவுச்சீட்டை பெற விரும்பும் இந்தியர் ஒருவர் இணையவழிமூலம் http://passport.gov.in/nri எனும் இணையத்தளத்திற்கு சென்றும் விண்ணப்பிக்கலாம். பின்னர், தமது விண்ணப்பத்தின் பதிப்பிக்கப்பட்ட பிரதியுடன் இது தொடர்பான மேலதிக விடயங்களை பூர்த்தி செய்வதற்காகவும் மேலதிக நடைமுறைகளை நிறைவேற்றவென விண்ணப்பத்தை துணைத்தூதரகத்துக்கு அனுப்புவிப்பதற்காகவும் மேற்குறிப்பிட்ட சேவை வழங்குனரிடம் செல்லுதல் வேண்டும்.

4. விண்ணப்பம்கையளித்தல் மற்றும் கடவுச்சீட்டு மீளப்பெறுதலுக்கான நேரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| விண்ணப்பம் கையளித்தல் | : | 0830-1400 மணி |
| கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்கள் மீளப்பெறுதல் | : | 1630-1730 மணி |

***